Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 57/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW10** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கணேசன் |
| Father/Husband Name | : | கார்மேகம் |
| Village | : | உச்சிப்புளி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | வயர்மேன் ஹெல்பர் |
| Religion | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2025

(2ம் எதிரி இராமநாதபுரம் மாவட்ட சிறையில் இருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி இறப்பு.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்ட உச்சிப்புளியில் வசித்து வருகிறேன், இராமநாதபுரம் நகராட்சியியில் வயர்மேன் ஹெல்பராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். நான் இராமநாதபுரம் நகராட்சி வார்டு 1 முதல் 11 வரையிலான பகுதிகளுக்கு வயர்மேன் ஹெல்பராக பணியாற்றினேன். இராமநாதபுரம் நகராட்சி 7வது வார்டுகது உட்பட்ட செய்யது அம்மாள் மருத்துவமனை முன்பு ஒரு கொலை நடந்ததாகவும், அந்த கொலை இரவு 10.15 மணியளவில் நடந்ததாகவும், அந்த தேதி, நேரத்தில் அந்த பகுதியில் மின்சார விநியோகம் சீராக இருந்ததா அல்லது துண்டிப்பு செய்யப்பட்டிருந்ததா என 07.11.2009ம் தேதி இராமநாதபுரம் பஜார் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார், நான் அன்றைய தினம் அதாவது 06.11.2009ம் தேதி இரவு 10.15 மணியளவில் செய்யது அம்மாள் மருத்துவமனை முன்பு மின்சார விநியோகம்

துண்டிக்கப்படவில்லை என்றும், சீராக இருந்தது என்றும் கூறினேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நகராட்சியில் பல்வேறு பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் மூலம் மின்சார விநியோகம் குறித்து கேட்டாரா என்றால் இல்லை. 06.11.2009ம் தேதி இரவு மழை பெய்து கொண்டிருந்தது என்றால் ஞாபகமில்லை. பொதுவாக இடி, மின்னலுடன் மழை வந்தால் மின்சார விநியோகத்தை துண்டித்துவிடுவோம் என்றால் சரிதான். ஆய்வாளர் வாய்மொழியாக கேட்டுக்கொண்டதின் அடிப்படையில்தான் சொன்னேனா என்றால் ஆமாம். நான் எதன் அடிப்படையில் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை என்று சொல்கிறேன் என்றால் துண்டிக்கப்படவில்லை என்பதால்தான் சொல்கிறேன். நான் காலை பணிக்கு வந்தால் இரவு 09.00 மணிக்குத்தான் செல்வேன். மின்சாரம் விநியோகம் இடையில் துண்டிக்கப்பட்டிருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மறுநாள் காலை மின்கம்பத்தில் எரிந்த விளக்கை அணைக்க செல்லும்போது அது எரிந்து கொண்டிருந்தது. நான் அனுமானத்தின்பேரில்தான் மின்சாரம் விநியோகம் இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மின்விநியோகம் குறித்து நான் கருத்து கூற சரியான நபர் இல்லை என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி:**

நகராட்சி பகுதிகளில் உள்ள பொது மின்கம்பங்களில் உள்ள விளக்குகளை யார் பராமரிப்பார்கள் என்றால் நகராட்சி நிர்வாகம். மின்விநியோகம் சம்மந்தப்பட்டதை யார் பராமரிப்பார்கள் என்றால் மின்சார வாரியம். மின்விளக்குகள் எரியாமல் போனால்தான் நாங்கள் விளக்குகளை மாற்றுவோம் என்றால் சரிதான். மின்விநியோகம் துண்டிக்கப்பட்டால் யார் சரிசெய்வார்கள் என்றால் மின்சாரவாரியம்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.